**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.301/2020.

Prosecution witness for P.W.31.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. சங்கரலிங்கம்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.08.2025.

A6 died. Others present.

முதல் விசாரணை

நான் தற்போது விளாத்திகுளம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 30.12.2019 அன்று ஒட்டப்பிடாரம் காவல்நிலையத்தில் தட்டச்சு காவலராக பணியில் இருந்தபோது நிலைய குற்ற எண் 154/2019 இதச 147, 148, 341, 294(பி), 302 பிரிவுகள் படியான வழக்கில் ஆய்வாளர் புலன் விசாரணைக்கு நான் உதவியாக இருந்து சாட்சிகளின் வாக்குமூலங்களை ஆய்வாளர் சொல்லச் சொல்ல நான் ஆய்வாளரின் மடிக்கணினியில் தமிழில் தட்டச்சு செய்தேன். 3ம் எதிரி மேலமீனாட்சிபுரம் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள சித்தி விநாயகர் கோவில் அருகில் ஆய்வாளர் கைது செய்தபோது 3, 4, இறந்துபோன 6ம் எதிரி, 7ம் எதிரி, ஆகியோர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களை நான் மடிக்கணினியில் தட்டச்சு செய்தேன். சில சாட்சிகளை சம்பவ இடத்திலும், காயம்பட்ட சாட்சிகளை துூத்துக்குடி அரசு மருத்துவமனையிலும் ஆய்வாளர் விசாரிக்க நான் வாக்குமூலங்களை மடிக்கணினியில் தட்டச்சு செய்தேன். ஆய்வாளர் விசாரணைக்கு நான் முழுவதும் உதவியாக இருந்தேன்.

குறுக்கு விசாரணை

நான் கணினியில் தட்டச்சு செய்த வாக்குமூலங்களில் சாட்சிகள் கையொப்பமிட்டார்கள். மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்களை எங்கு பிரதி எடுத்தேன் என்றால் நான் மட்டும் காவல்நிலையம் சென்று பிரதி எடுத்துக் கொண்டு மீண்டும் மேற்படி கோவில் அருகில் வந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை. உயர் அதிகாரி கேட்டுக் கொண்டதற்கிணங்க முதல் விசாரணை சங்கதிகளை கற்பனையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் எந்த எதிரியையும் கைது செய்யவில்லை என்றும், எந்த எதிரியும் ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், ஏற்கனவே காவல்நிலையத்தில் பின்னிட்டு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.08.18 18:39:38 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.